கட்டுரை

பிரேமம் 10 ஆண்டுகள்:

ஜி.ஏ.கௌதம்

நினைவுகளின் பெருமழை பொழியும் நித்திய வசந்தம்

சினிமா என்பது வெறும் பொழுதுபோக்கு மட்டுமன்றி சில சமயங்களில், அது நம் வாழ்வின் ஒரு பகுதியாக, நினைவுகளின் தொகுப்பாக, உணர்வுகளின் பிரதிபலிப்பாக மாறிவிடுகிறது. ஆனால், மிக அரிதாக, ஒரு திரைப்படம் காலத்தின் சுவர்களை உடைத்து, ஒரு தலைமுறையின் ஒட்டுமொத்த உணர்வுகளின் பிரதிபலிப்பாக, அவர்களின் இளமையின் தேசிய கீதமாகவே மாறிவிடுகிறது. அப்படி 2015ஆம் ஆண்டு, ஒரு வெள்ளிக்கிழமை மதியம் திரையரங்கின் இருளைக் கிழித்துக்கொண்டு நம் இதயங்களில் ஒளி பாய்ச்சிய ஒரு மலையாளக் கவிதை அல்போன்ஸ் புத்திரனின் ‘பிரேமம்’. அது ஒரு திரைப்படம் என்பதைத் தாண்டி, ஒவ்வொரு பார்வையாளனும் தனக்குள் தொலைத்துவிட்ட அல்லது பத்திரமாகப் பூட்டி வைத்திருக்கும் தன் இளமைக்காலத்து நாட்குறிப்பின் காணக்கிடைக்காத ஒரு பக்கம்.

ஒரு தசாப்தம் கடந்துவிட்ட பிறகும், ‘பிரேமம்’ ஏன் நம்மை விட்டு அகல மறுக்கிறது? காரணம், அது ஜார்ஜ் டேவிட் என்ற ஒருவனின் பார்வையில் மூன்று பருவங்களாகப் பிரிக்கப்பட்ட நம் அனைவரின் கதை. பட்டாம்பூச்சிகளைத் துரத்திய பள்ளிப் பருவம், அர்த்தமே இல்லாமல் சுற்றிய கல்லூரிப் பருவம், வாழ்க்கையின் யதார்த்தங்களைச் சந்தித்த வாலிபப் பருவம் என நம் வாழ்வின் மூன்று வெவ்வேறு நிலைகளின் சாராம்சத்தை இரண்டரை மணி நேரத்தில் திரையில் வடித்த ஒரு மாயாஜாலம் அது. ‘பிரேமம்’ ஒரு வகையான அமிர்த சஞ்சீவி. எத்தனை முறை பார்த்தாலும், அது நம்மை கால இயந்திரத்தில் ஏற்றி, முதல் காதலின் படபடப்புக்கும், கல்லூரி நண்பர்களின் ஆரவாரத்திற்கும், பிரிவின் முதல் வலிக்கும் மீண்டும் ஒருமுறை இழுத்துச் செல்கிறது. ஜார்ஜின் பயணத்தின் வழியே, காதல், நட்பு, இழப்பு மற்றும் வாழ்க்கை பற்றிய அதன் தத்துவத்தை ஆழமாக ஆராயும் ஒரு பயணம் இது.

முதல் பருவம் (2000):

கருப்பு வெள்ளை கனவுகளும் பட்டாம்பூச்சி சிறகுகளும்

2000களின் ஆரம்பம். அதுவோர் இடைப்பட்ட காலம். 90களின் மிச்சமிருந்த அப்பாவித்தனமும், புதிய மில்லேனியத்தின் தொழில்நுட்பத் தொடக்கமும் கலந்த ஒரு கலவை. STD Boothகளிலும், லேண்ட்லைன் (Landline) போன்களிலும் காதலிக்காகவும், நண்பர்களுக்காகவும் மணிக்கணக்கில் காத்திருந்த, ஆட்டோகிராஃப்களில் கவிதைகள் எழுதிப் பரிமாறிக்கொண்ட காலம். அந்தக் காலகட்டத்தின் அச்சு அசலான பிரதிநிதியாக, மேல்நிலைப் பள்ளி வாசலில் நிற்கிறான் ஜார்ஜ். மீசை அரும்பத் தொடங்கும் அந்தப் பருவத்தில், நண்பர்களான சம்பு, கோயா என அவனது உலகம் மிகச் சிறியது. கூடவே... மேரி (அனுபமா பரமேஸ்வரன்).

மேரி, ஜார்ஜின் முதல் காதல். ‘காதல்’ என்ற வார்த்தைக்குள் அடங்காத ஒரு தூய ‘பள்ளிப் பருவத்து ஈர்ப்பு’. பட்டாம்பூச்சியின் சிறகாகப் படர்ந்த கூந்தலுடன், தேவதையைப் போல அவள் நடந்து வரும்போது, ஜார்ஜின் உலகம் அவளைச் சுற்றி மட்டுமே சுழல்கிறது. அவளுக்காகப் பாலத்தில் காத்திருப்பது, அவள் கடந்து போகும் நொடியில் வேண்டுமென்றே சத்தமாகச் சிரிப்பது, அவள் பெயர் கேட்டாலே வெட்கத்தில் முகம் சிவப்பது என முதல் ஈர்ப்பின் அத்தனை இலக்கணங்களையும் அவன் பின்பற்றுகிறான். இது ஒரு முழுமையான காதல் அல்ல, காதலின் கரு. ஒரு கருப்பு வெள்ளைத் திரைப்படத்தைப் போல, இதில் சிக்கலான வண்ணங்கள் இல்லை. நன்மை, தீமை என்ற பிரிவுகள் இல்லை. பிடிக்கும் அல்லது பிடிக்காது, இவ்வளவுதான் அந்த வயதுக்குத் தெரியும்.

அல்போன்ஸ் புத்திரன் இந்த அத்தியாயத்தை மிக நுணுக்கமாக வடிவமைத்திருந்தார். ஜார்ஜின் காதலை விட, அவனது நண்பர்களின் விசுவாசத்தையும், அந்த வயதுக்கே உரிய முட்டாள்தனமான திட்டங்களையும் அழகாகப் பதிவு செய்திருப்பார். மேரியின் வீட்டு லேண்ட்லைன் எண்ணைக் கண்டுபிடித்து, காதலைச் சொல்ல அவன் படும் பாடும், இறுதியில் அவளது தந்தை போனை எடுத்து பேசுவதும் ஒரு நகைச்சுவைக் காட்சியாக இருந்தாலும், அது அந்த தலைமுறையின் அப்பட்டமான யதார்த்தம். காதல் தோல்வியில் முடியும்போது, ஜார்ஜுக்கு ஏற்படுவது வலி என்பதைக்காட்டிலும், அது ஒருவித ஏமாற்றம் மட்டுமே. ஒரு சிறுவன் ஆசையாகக் கேட்ட பொம்மை கிடைக்காத போது அழும் அழுகையைப் போன்றது அது. ஆனால் இந்தச் சூழல்தான், வாலிபத்தின் அடுத்த கட்டத்திற்கு அவனைத் தயார்படுத்தியது. பட்டாம்பூச்சியின் காலம் முடிந்து, புயலின் காலம் தொடங்கவிருக்கிறது என்பதற்கான முன்னுரை அது.

இரண்டாம் பருவம் (2005):

புயலும், பூகம்பமும், மலரும்

ஐந்து வருடங்கள் உருண்டோடுகின்றன. பள்ளியில் பார்த்த சாதுவான ஜார்ஜ், இப்போது கறுப்புச் சட்டை, வெள்ளை வேட்டி, முறுக்கிய மீசையுடன் கல்லூரியின் ‘ஹீரோ’வாக வலம் வருகிறான். வகுப்பறையை விட, கல்லூரி கேன்டீனிலும், எதிர்க் குழுவுடன் மோதும் சண்டைகளிலும்தான் அவன் அதிகம் காணப்படுகிறான். அவனது ஆரவாரமும், அடங்காத திமிரும், ‘கலிப்பு’ பாடலின் ராக் இசையைப் போல உச்ச ஸ்தாயியில் ஒலிக்கிறது. ஆனால், இந்த முரட்டுத்தனமான முகமூடிக்குக் கீழே, ஒரு திசையறியாத, நோக்கமற்ற இளைஞன் இருப்பதை நம்மால் உணர முடிகிறது. அவனது வாழ்க்கை ஒரு கட்டுப்பாடில்லாத காட்டாறு போல ஓடிக்கொண்டிருக்கிறது.

அந்தக் காட்டாற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்தி, அதன் போக்கை மாற்றியமைக்க ஒரு மெல்லிய சாரலாகவும், அதேசமயம் ஓர் ஆழமான சக்தியாகவும் நுழைகிறாள் ‘மலர்’ (சாய் பல்லவி); ஒரு தற்காலிக விரிவுரையாளர். அதுவும் ஒரு தமிழ்ப் பெண். அவள் வகுப்பறைக்குள் நுழையும் அந்த ஒரு நொடி, ஜார்ஜின் உலகில் நிகழ்கிறது பூகம்பம். அதுவரை தன் கட்டுப்பாட்டில் இருந்த வகுப்பறை, தன் நண்பர் கூட்டம், தன் அதிகாரம் என அனைத்தும் அவளின் அதிகாரத்திலும், புன்னகையிலும் கரைந்து போகிறது. அவன் மீண்டும் ஒரு மாணவனாகிறான். அவளை கவர விரும்பும் ஒரு சாதாரண இளைஞனாக மாறுகிறான். போகப்போக அவளுக்கும் ஜார்ஜை பிடித்துப் போகிறது.

ஜார்ஜின் வாழ்க்கையில் இதுதான் ஆழமான காதல். மேரியின் மீதிருந்தது ஒரு ஈர்ப்பு என்றால், மலர் மீதிருந்தது ஓர் ஆத்மார்த்தமான பிணைப்பு. நடனப் பயிற்சியின்போது ஏற்படும் நெருக்கம், அவனுக்கு பிடித்த மலருடன் வருவது, ஒருவரையொருவர் மௌனமாகப்

புரிந்துகொள்வது என இந்தக் காதல் மெதுவாகவும், ஆழமாகவும் கட்டமைக்கப்படுகிறது. 'மலரே' பாடல், இந்தக் காதலின் ஒரு கவிதை வடிவம்.

காதல் அதன் உச்சத்தை அடையும் போது, விதி தன் கொடூரமான முகத்தைக் காட்டுகிறது. அவள் தன் பெற்றோரிடம் பேச ஊருக்குச் செல்வதாகச் சொல்லிவிட்டுப் போகும் தருணம் வரை, எல்லாம் ஒரு கனவைப் போல அழகாக இருந்தது. ஆனால், விபத்தின் வடிவில் வரும் சோகம், அந்தக் கனவைச் சிதைக்கிறது. சாலை விபத்து, மலரின் நினைவுகளை பறிப்பதோடு, ஜார்ஜின் ஆன்மாவின் ஒரு பாதியையும் சேர்த்தே பறித்துச் செல்கிறது.

இந்த அத்தியாயத்தின் முடிவுதான் படத்தின் உச்சபட்ச சோகம். விபத்திற்குப் பிறகு, ஜார்ஜ் அவளைச் சந்திக்கும் காட்சியில், அவன் அத்தனை நம்பிக்கையுடன் செல்ல, அவனை அடையாளம் தெரியாமல் 'யார்?' என்று மலர் கேட்கின்ற அந்த ஒரு கேள்வி திரையரங்கில் ஒரு நிசப்தத்தை உருவாக்கியது. ஜார்ஜின் இதயத்தில் விழுந்த இடி காதலின் பரவசத்தையும், இழப்பின் கொடூரத்தையும் ஒரே பருவத்தில் காட்டி, ஜார்ஜ் எனும் முரட்டுத்தனமான பாறையை உடைத்து, அவனை ஒரு பக்குவப்பட்ட மனிதனாகச் செதுக்கியது.

மூன்றாம் பருவம் (2014):
புயலுக்குப் பின் அமைதி

கிட்டத்தட்ட ஒரு தசாப்தம் கடக்கிறது. 2014ம் ஆண்டு. இப்போது ஜார்ஜ், முப்பது வயதை நெருங்கும் ஒரு முழுமையான மனிதன். முறுக்கிய மீசையில்லை, கறுப்புச் சட்டையில்லை. நேர்த்தியான உடைகள், மென்மையான புன்னகை, நிதானமான பார்வை, தெளிவான பேச்சு. வாழ்க்கையின் புயல்களைக் கடந்து, ஓர் அமைதியான கரைக்கு வந்து சேர்ந்திருக்கிறான். பேக்கரியில் இருப்பவர்களை அவன் கையாளும் விதத்திலேயே, பழைய ஜார்ஜ் மறைந்துவிட்டான் என்பதை நம்மால் உணர முடியும்.

அவனது வாழ்வில் புயல்கள் ஓய்ந்து, அமைதி திரும்பும்போது, அவனது புதிய அத்தியாயம் தொடங்குகிறது. அது, அவன் சிறுவயதில் பார்த்த, ஆனால் கண்டுகொள்ளாத 'செலின்' எனும் பெண்ணுடன் கைகோர்க்கும்போது நிகழ்கிறது. காதல் என்பது நாம் தேடி அலையும் ஒரு புதையல் அல்ல, அது சரியான நேரத்தில் நம்மை வந்தடையும் ஒரு வரம் என்பதைப் போல, அவன் வாழ்க்கையில் இயல்பாக நுழைகிறாள் செலின் (மடோனா செபாஸ்டியன்).

அவர்களுக்கிடையேயான உறவில், முதல் காதலின் பதற்றமோ, இரண்டாம் காதலின் தீவிரமோ இல்லை. அதற்குப் பதிலாக, ஓர் ஆழமான புரிதலும், மென்மையான நட்பும் இருக்கிறது. ஒருவரை ஒருவர் முழுமையாக அறிந்த, ஏற்றுக்கொண்ட இருவரின் பக்குவப்பட்ட அன்பு அது. ஒரு ஆரவாரமில்லாத, அமைதியான நதியைப் போல அது பயணிக்கிறது.

இறுதியில், தன் திருமணத்தில், தன் கடந்த காலத்தின் முந்தைய அத்தியாயங்களுடன் சங்கமிக்கும்போது, 'ஆழ்வார்பேட்டை ஆண்டவா' பாடலில் கமல்ஹாசன் சொல்வது போல, ஜார்ஜின் வாழ்க்கை மூன்றாம் சுற்றில் முழுமையடைகிறது.

திரைக்குப் பின்னிருந்த ஜீவன்: புத்திரனின் மேஜிக்

இத்திரைப்படத்தின் இயக்குநர் அல்போன்ஸ் புத்திரன்.

சினிமாவின் புதிய அலைக்கான தொடக்கப் புள்ளியாக அமைந்த, கலைஞர் தொலைக் காட்சியின் 'நாளைய இயக்குநர்' முதல் சீசனில் கார்த்திக் சுப்புராஜ், நலன் குமாரசாமி (சூது கவ்வும்), மணிகண்டன் (காக்கா முட்டை), பாலாஜி மோகன் (மாரி) போன்ற இயக்குநர்களுடன் பெரிதும் கவனிக்கப்பட்டவர்.

'நாளைய இயக்குநர்' போட்டியில் பங்கேற்ற மற்ற இயக்குநர்களிடமிருந்து அல்போன்ஸ் புத்திரனைத் தனித்துக் காட்டியது, அவரது படத்தொகுப்பு மற்றும் கதை சொல்லும் பாணி. அவர் இயக்கிய குறும்படங்கள், குறிப்பாக "தி ஏஞ்சல்" (The Angel) மற்றும் "நேரம்" ஆகியவை.

ஒரு படத்தொகுப்பாளராகவே தன் பயணத்தைத் தொடங்கியதால், அவரது குறும்படங்களில் படத்தொகுப்பு ஒரு தனிக் கவனம் பெற்றது. நேர்க்கோட்டில் கதை சொல்லாமல், காட்சிகளை மாற்றிப் போடும் (Non-linear) உத்தி, இசையின் வேகத்திற்கு ஏற்றவாறு காட்சிகளை வெட்டி ஒட்டும் லயமான படத்தொகுப்பு (Rhythmic Editing), மற்றும் நகைச்சுவைக்காகப் பயன்படுத்தப்பட்ட திடீர் வெட்டுகள் (Jump Cuts) ஆகியவை அப்போதே அவரது அடையாளமாக மாறின. இதற்காக அந்த சீசனில் சிறந்த படத்தொகுப்பாளர் விருதையும் வென்றார். ராஜேஷ் முருகேசன் (இசையமைப்பாளர்), பாபி சிம்ஹா, கார்த்திக் சுப்புராஜ், பாலாஜி மோகன், விஜய் சேதுபதி என அனைவரும் இந்த போட்டியின் மூலம் அவருக்கு கிடைத்த நண்பர்கள்.

"Writen and Directed By விக்ரமன்" என்று தன் கையெழுத்தையே பெயராக இயக்குநர் விக்ரமன் பயன்படுத்தியது போன்று, தன் முகத்தையே கையெழுத்தாக திரையில் இட்டு தனது முதல் படத்தில் ஒரு புது பிராண்டை உருவாக்கியவர் அல்போன்ஸ். அவர் இயக்கிய 'நேரம்' (நஸ்ரியா தமிழில் அறிமுகம்) திரைப்படத்திற்கும் நல்ல வரவேற்பு கிடைத்திருந்தது. அந்தத் திரைப்படத்திலுமே Thanks Card இல்

"காதலிகளுக்கும், முன்னாள் காதலிகளுக்கும்" என நக்கலாக நன்றி தெரிவித்திருப்பார். அப்படத்தின் கதை சொல்லும் விதத்திலும், படத்தொகுப்பிலும் இருந்த மிகநேர்த்தியும் புதுமையும் ஏனைய படங்களிலிருந்து அவரை தனித்து காண்பித்தது.

பிரேமம் படத்தின் இறுதியில், நிச்சயம் செய்யப்பட்ட மணப்பெண்ணை தகாத வார்த்தைகளால் திட்டி, அழ வைத்து, ஜார்ஜ் & கோவிடம் அடிவாங்கி கைகள் கட்டப்பட்டு வாயில் இரத்தத்துடன் இருக்கும் ஒரு டாக்ஸிக்கான மக்கு கதாப்பாத்திரத்தில் நடிக்க இந்தியாவில் எந்த இயக்குநரும் தயாராக இருப்பாரா என்றால் சந்தேகமே. உண்மையில், தான் இயக்கும் படத்தில் அசிங்கப்படும், ஒதுக்கப்படும் ஒரு பாத்திரத்தில் நடிக்க யார்தான் துணிவார்கள். ஆனால், அல்போன்ஸ் அந்த கதாப்பாத்திரத்தை ஏற்று நடித்தார். எப்படி என்று கேட்டால், அதுதான் அல்போன்ஸ் புத்திரன்.

அ. படத்தொகுப்பு மற்றும் இயக்கம்:

ஒரு திரைப்படத்தின் கதையை, அதன் ஆன்மாவை, பார்வையாளனிடம் கொண்டு சேர்க்கும் இறுதிப் பொறுப்பு படத்தொகுப்பாளரின் கைகளில் இருக்கிறது. இந்தப் படத்தின் இயக்குநர் மட்டுமல்ல, படத்தொகுப்பாளரும் அல்போன்ஸ் புத்திரன்தான். இதுவே, அப்படத்தின் மிகப்பெரிய பலங்களில் ஒன்று. ஒரு படைப்பாளி, தன் மனதில் கற்பனை செய்த காட்சிகளை, அதே உணர்வுடனும், அதே லயத்துடனும் திரையில் கொண்டுவர, அவரே படத்தொகுப்பாளராகவும் இருப்பது ஒரு வரம்.

அல்போன்ஸ் புத்திரனின் படத்தொகுப்பு பாணி, வழக்கமான சினிமா இலக்கணங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. அவர் காட்சிகளை நேர்த்தியாக இணைப்பதை விட, உணர்ச்சிகளை நேர்த்தியாகக் கடத்துவதற்கே முக்கியத்துவம் கொடுத்தார். இதன்மூலம், வழக்கமான கதை சொல்லும் விதத்தை உடைத்து காட்சிகளைப் புதுவடிவில் தொகுத்திருந்தார்.

1. லயம் தவறாத கதைசொல்லல் (Rhythmic Storytelling):

'பிரேமம்' படத்தின் வேகம், அதன் மூன்று பருவங்களிலும் மூன்று விதமாக இருக்கும்.

பள்ளிப் பருவம்: ஜார்ஜின் இளமைக்கே உரிய துள்ளலான மனநிலையைப் பிரதிபலிக்கும் வகையில், இப்பருவத்தின் படத்தொகுப்பு மிக வேகமாகவும், துண்டு துண்டான காட்சிகளின் (Quick Cuts) தொகுப்பாகவும் இருக்கும். இது ஒருவித பரபரப்பையும், நிலையற்ற தன்மையையும் பார்வையாளர்களுக்குக் கடத்தியது. அதனால்தான் 'ஆலுவா' பாடலைத் தவிர்த்து இந்தப் பருவத்தின் காட்சிகள் எதுவும் பெரிதாக உங்களுக்கு நினைவில் இருக்காது.

கல்லூரிப் பருவம்: இங்கே படத்தொகுப்பு, இரட்டை வேடம் போட்டது. சண்டைக் காட்சிகளிலும், நண்பர்களின் அரட்டைகளிலும் மிக வேகமான, இசையின் பீட்டிற்கு (Beat) ஏற்றவாறு வெட்டப்பட்ட தொகுப்புகள் (Rhythmic Cuts) பயன்படுத்தப்பட்டன. ஆனால், மலருடனான காதல் காட்சிகளில், மிக நீண்ட, நிதானமான ஷாட்கள் (Long Takes) மூலம், அந்தக் காதல் ஆழமாக வேரூன்றுவதற்கு அவகாசம் கொடுக்கப்பட்டது.

2. புத்திரனின் தனித்துவ முத்திரைகள் (Puthren's Signature Style):

அல்போன்ஸ் புத்திரன், படத்தொகுப்பில் சில தனித்துவமான

உத்திகளை கையாண்டார். அவை 'Puthrenism' என்றே சொல்லுமளவிற்கு தனித்துவமானவை.

• 'பிரேமம்' என்றாலே நினைவுக்கு வருவது அதன் slow-motion நடைகள்தான். திரையில் தோன்றி மறையும் எழுத்துக்கள் என அவரது இயக்கம் ஒரு புதுமையான அனுபவத்தைக் கொடுத்தது. உதாரணமாக, 'கலிப்பு' பாடலின் சண்டைக்காட்சியின் இறுதியில் ஜார்ஜும் அவனது நண்பர்களும் கறுப்புச் சட்டையில் ஸ்லோவாக நடந்து வருவதும், அவர்களின் முன்பாக SUSPENDED FOR 2 MONTHS என்ற எழுத்தும் காணும் காட்சியில் கல்லூரி ரசிகர்களின் உச்சபட்ச குரலால் திரையரங்கே அதிர்ந்தது.

• முன்னுக்குப்பின்னாக காட்சிகள் தொகுக்கப்பட்ட 'ஆலுவா' பாடலும், படத்தின் இறுதியில் அல்போன்ஸை ஜார்ஜின் நண்பர்கள் அடிப்பதையும், திருமண வரவேற்பின் காட்சிகளையும் குறுக்குவெட்டாக படத்தொகுப்பு செய்திருந்ததும் அல்போன்ஸ் புத்திரனின் கூரிய படத்தொகுப்பிற்கு சிறந்த உதாரணம்.

• மலர் முதன்முதலில் வகுப்பறைக்குள் நுழையும் காட்சி, ஜார்ஜின் புன்னகை, அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளும் தருணங்கள் என மிக முக்கியமான உணர்வுப்பூர்வமான இடங்கள், மெதுவான அசைவுகளில் காட்டப்பட்டன.

• மலரின் நினைவுகளை இழக்கும் தருணத்தை, ஒரு சில நொடி Montage காட்சிகளில் சொல்லி, பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பார். 'மலரே' பாடலில் வரும் காட்சிகள், ஒரு காதல் கதையின் சுருக்கம். இந்தத் துரிதமான வெட்டுகள், படத்தின் வேகத்தையும், உணர்ச்சிகளின் அடர்த்தியையும் கூட்டின.

ஆ. இசையின் ஆன்மா:

படத்தின் மூன்று பருவங்களைப் போலவே, அதன் பின்னணி இசையும் மூன்று வெவ்வேறு உலகங்களைக் கொண்டிருந்தது. ராஜேஷ் முருகேசன், ஒவ்வொரு காலகட்டத்தின் மனநிலையையும், அதன் சாரத்தையும் இசையின் வழியே துல்லியமாகப் பதிவு செய்திருந்தார்.

ராஜேஷ் முருகேசனின் பாடல்கள், இந்தப் படத்தின் இரண்டாவது கதாநாயகன். ஒவ்வொரு பருவத்திற்கும் ஒரு தனித்துவமான இசை பாணியை வழங்கியிருந்தார். பள்ளிப் பருவத்தின் துள்ளலுக்கு ரெட்ரோ இசையும், கல்லூரி காலத்தின் திமிருக்கு ‘கலிப்பு’ போன்ற ராக் இசையும், மலரின் காதலுக்கு விஜய் யேசுதாஸின் குரலில் ‘மலரே’ போன்ற மெல்லிசையும், மூன்றாம் பருவத்தின் கொண்டாட்டத்திற்கு ஃபோக் இசையும் என இசையின் வழியே கதையின் உணர்வுகளைப் பயணிக்க வைத்தார். ‘மலரே’ ஒரு தலைமுறையின் காதல் கீதமாகவே மாறியது.

இந்தப் படத்தில் உங்களுக்குப் பிடித்த பிரத்யேகமான காட்சிகளை Mute செய்து, இப்போது பாருங்கள். வித்தியாசம் புரியும். அதுவே பின்னணி இசை செய்யும் மாயம். பாடல்கள் அதன் கொண்டாட்டமான முகமென்றால், பின்னணி இசை அதன் துடிக்கும் இதயம். அந்த வகையில், அல்போன்ஸ் புத்திரனின் ‘பிரேமம்’ திரைப்படத்தை ஒரு முழுமையான அனுபவமாக மாற்றியதில், ராஜேஷ் முருகேசனின் பின்னணி இசைக்கு மிக முக்கியப் பங்குண்டு.

- ஜார்ஜின் பள்ளிப் பருவத்தில் ஒலிக்கும் இசை, அந்த வயதிற்கே உரிய துள்ளலும், கவலையின்மையும், கொஞ்சம் முட்டாள்தனமும் கலந்த ஒரு கொண்டாட்டமாக இருந்தது. குறிப்பாக, ஜார்ஜும் அவனது நண்பர்களும் மேரியைப் பின்தொடரும் காட்சிகளிலும், பாலத்தில் அரட்டை அடிக்கும் போதும் ஒலிக்கும் டிரம்ஸ் கலந்த இசை, அவர்களது அடங்காத ஆற்றலைப் பிரதிபலித்தது. இந்த அத்தியாயத்தில் சீரியஸான மெலொடிகள் இல்லை. மாறாக, இலக்கற்ற, ஜாலியான ஒரு ராக் இசையின் சாயல் இழையோடியது.

- கல்லூரியில் ஒரு முரடனாக ஜார்ஜ் நுழையும்போதும், எதிரணியுடன் மோதும்போதும், அவனது அடங்காத திமிரை வெளிப்படுத்தும் விதமாக ஒரு கனமான, பேஸ் (Bass) அதிகம் கொண்ட ராக் இசை ஒலிக்கும். அது ‘கலிப்பு’ பாடலின் நீட்சியாக, அவனது கோபத்தையும், அதிகாரத்தையும், கட்டுக்கடங்காத தன்மையையும் பறைசாற்றியது. இதற்கு முற்றிலும் எதிராக, மலர் திரையில் தோன்றும்போதெல்லாம், அந்த ராக் இசை அடங்கி, ஒரு மெல்லிய வயலின் அல்லது பியானோவின் நாதம் மெதுவாக எழும்.

- ஜார்ஜ் பக்குவப்பட்ட மனிதனாக மாறியதை, அவனது பின்னணி இசையும் பிரதிபலித்தது. முந்தைய பருவங்களின் ஆரவாரமான ராக் இசையோ, தீவிரமான மெலொடியோ இங்கே இல்லை. பதிலாக, மென்மையான ஒலியுடன் கூடிய அக்கௌஸ்டிக் கிட்டார் (Acoustic Guitar), இலகுவான பியானோ ஆகியவை பயன்படுத்தப் பட்டன. ஜார்ஜ் தனது பேக்கரியில் வேலை செய்யும் காட்சிகளில் ஒலிக்கும் இசை, ஒரு விதமான மன நிறைவையும், வாழ்க்கையின் புயல்களைக் கடந்து வந்த அமைதியையும் குறித்தது. செலினுடனான அவனது உறவைச் சொல்லும் இசை, ஆர்ப்பாட்டமில்லாத, வெதுவெதுப்பான ஒரு தேநீரைப் போல இதமாக இருந்தது.

இ. ஒளிப்பதிவின் கவிதை:

ஆனந்த் சி.சந்திரனின் கேமரா, காட்சிகளைக் கவிதைகளாக எழுதியது. கல்லூரிப் பருவத்தின் பசுமையும், வண்ணமயமான சூழலும், மலரின் பிரிவுக்குப் பின்னான மங்கிய, நிறமற்ற உலகமும், பேக்கரியின் வெதுவெதுப்பான, பொன்னிற வெளிச்சமும் என ஒளிப்பதிவின் மூலமே கதாபாத்திரங்களின் மனநிலையைப் பார்வையாளர்களுக்குக் கடத்தினார்.

மூன்று காலகட்டங்களுக்கும் மூன்று வெவ்வேறு வண்ணத் தட்டுகளை (color palettes) பயன்படுத்தியிருப்பார் ஆனந்த்.

- பள்ளிப் பருவத்தில், ஒருவிதமான பச்சை மற்றும் மஞ்சள் நிறங்களின் கலவை, இளமையின் துடிப்பையும், கிராமப்புற அழகையும் காட்டியது. காட்சிகள் சற்று பிரகாசமாகவும், உயிரோட்டத்துடனும் இருந்தன.

- கல்லூரிப் பருவத்தில், சிவப்பு மற்றும் நீல நிறங்களின் ஆதிக்கம் அதிகம். இது காதலின் தீவிரத்தையும், நாடகத்தன்மையையும் வெளிப்படுத்தியது. வகுப்பறை காட்சிகள், மலரின் முகபாவனைகள் என அனைத்தும் ஒரு கதகளி ஓவியம் போல இருந்தன.

- மூன்றாம் பருவத்தில், காட்சிகள் மிகவும் இயல்பாகவும், சுத்தமாகவும், மென்மையான வண்ணங்களுடனும் இருந்தன. இது ஜார்ஜின் வாழ்க்கையில் வந்திருக்கும் நிதானத்தையும், தெளிவையும் குறித்தது.

கலாச்சாரப் பேரலை: எல்லைகளை உடைத்தெறிந்த பிரேமம்

‘பிரேமம்’ ஒரு மலையாளத் திரைப்படம் என்பதைத் தாண்டி, தென்னிந்தியா முழுவதும், குறிப்பாக தமிழ்நாட்டில் ஒரு கலாச்சாரப் புயலையே நிகழ்த்திக் காட்டியது. அதன் தாக்கம், திரையரங்குகளின் வசூல் கணக்குகளைத் தாண்டி, தெருக்களிலும், கல்லூரிகளிலும், சமூக வலைதளங்களிலும் ஒரு சமூக இயக்கமாகவே வெளிப்பட்டது.

அ. ஃபேஷன் ஐகான்: ஒரு தலைமுறையின் சமூகச் சீருடை

கறுப்புச் சட்டை, வெள்ளை வேட்டி, லேசாக சுருட்டி விடப்பட்ட ஸ்லீவ்ஸ், கலையாத தலைமுடி, மற்றும் முரட்டுத்தனமான தாடி என நிவின் பாலி வலம் வந்த தோற்றம், தமிழ் சினிமாவின் ஹீரோயிசத்தில் ஒரு புதிய வகை ஆண்மையின் அடையாளமாக மாறியது. அது பாரம்பரியமும் (வேட்டி), நவீனத்தின் அடங்காத திமிரும் (கறுப்புச் சட்டை, தாடி) கலந்த ஒரு கலவை. இந்தத் தோற்றம், தமிழ்நாட்டின் கல்லூரி விழாக்கள் முதல் கோயில் திருவிழாக்கள் வரை இளைஞர்களின் அதிகாரப்பூர்வமற்ற யூனிஃபார்ம் ஆனது.

ஆ. மலர் டீச்சர் ஃபீவர்: தகர்ந்த அழகியல் விதிமுறை

தென்னிந்திய சினிமா, பல ஆண்டுகளாகக் கட்டமைத்து வைத்திருந்த ‘கதாநாயகி என்பவர் இப்படித்தான் இருக்க வேண்டும்’ என்ற அத்தனை அபத்தமான விதிகளையும் மலர் பாத்திரத்தில் நடித்த சாய் பல்லவி உடைத்தெறிந்தார். சிவப்பான தோல். மூலாம்

பூசியது போன்ற ஒப்பனை, செயற்கையான புன்னகை என எதுவும் அவரிடம் இல்லை. முகப்பருக்களுடன், மிக இயல்பான புன்னகையுடன் அவர் திரையில் தோன்றியபோது, அதுவரை அழகு குறித்து இருந்த அத்தனை பிம்பங்களும் நொறுங்கின. ‘அழகு என்பது நிறத்திலோ, ஒப்பனையிலோ இல்லை, அது இயல்பிலும், தன்னம்பிக்கையிலும் இருக்கிறது’ என்பதை மலர் கதாபாத்திரம் உரக்கச் சொன்னது. அவர் ஒரு மலையாளப் படத்தில், இயல்பான தமிழ் பேசும் ஒரு கதாபாத்திரமாக வந்தது, தமிழ்நாட்டு ரசிகர்களிடம் ஓர் உடனடிப் பிணைப்பை உருவாக்கியது.

இ. மொழி கடந்த வெற்றி:

டப்பிங் செய்யப்படாத ஒரு மலையாளப் படம், சென்னையில் உள்ள மல்டிபிளெக்ஸுகளில் நீண்ட நாட்களைக் கடந்து ஓடியது ஓர் அசாத்திய மான சாதனை. தமிழ் நாட்டில் மட்டுமே பல கோடிகளை வசூலித்து, அந்த ஆண்டு வெளியான பல தமிழ்ப் படங்களின் வசூலை முறியடித்தது. திரையரங்குகளில் மக்கள் கூட்டம் அலைமோதியது. இது, ‘கதை’ நன்றாக இருந்தால், மொழி ஒரு பொருட்டே அல்ல என்பதை வணிகரீதியாக நிரூபித்தது.

இந்த வெற்றிக்கு, அதன் உலகளாவிய கதைக்கரு (பள்ளி, கல்லூரி காதல்), அனைவரையும் ஈர்த்த இசை, மற்றும் சப்டைட்டில்களுடன் (Subtitles) படம் பார்க்கும் பழக்கம் இளைஞர் களிடையே அதிகரித் திருந்தது போன்ற பல காரணங்கள் இருந்தன. ஆனால், மிக முக்கியக் காரணம், வாய்மொழி விளம்பரம் (Word of Mouth). முதல் சில நாட்களில் படம் பார்த்தவர்கள், சமூக வலைதளங்களிலும், நண்பர்களிடமும் பரப்பிய நேர்மறையான விமர்சனங்கள், ஒரு சுனாமி போலப் பரவி, மக்களைத் திரையரங்குகளுக்கு வரவழைத்தது.

‘பிரேமம்’ படத்தின் இமாலய வெற்றி, மற்ற மலையாளப் படங்களுக்குத் தமிழ்நாட்டில் ஒரு பெரிய சந்தையைத் திறந்துவிட்டது. அதன் பிறகு, பல மலையாளத் திரைப்படங்கள், நம்பிக்கையுடன் தமிழ்நாட்டில் வெளியிடப்பட்டு, நல்ல வரவேற்பைப் பெற்றன. (சென்ற ஆண்டு வெளியான மஞ்சுமல் பாய்ஸ் உட்பட) இது தென்னிந்திய சினிமாவிற்குள் இருந்த மொழி சார்ந்த தடைகளை உடைத்து, ஓர் ஆரோக்கியமான கலாச்சாரப் பரிமாற்றத்திற்கு வித்திட்டது. ‘பிரேமம்’ ஒரு திரைப்படம் என்பதைத் தாண்டி, தென்னிந்திய சினிமாவை இணைத்த ஒரு பாலமாகவே இன்றும் நிலைத்து நிற்கிறது.

ஆட்டோகிராஃப்: ஒரு முன்னோடி

‘பிரேமம்’ திரைப்படம் வெளியாகி வெற்றி பெற்றபோது, பலரும் அதை சேரன் இயக்கிய ‘ஆட்டோகிராஃப்’ (2004) திரைப்படத்துடன் ஒப்பிட்டனர். இரு படங்களின் கருவும் கிட்டத்தட்ட ஒன்று. ஓர் ஆணின் வாழ்வில் வெவ்வேறு காலகட்டங்களில் வரும் மூன்று காதல்களைப் பற்றிய கதை.

‘ஆட்டோகிராஃப்’ ஒரு யதார்த்தமான, உணர்வுப்பூர்வமான பயணமாக இருந்தது. அதன் நாயகன் சேரன், தன் பள்ளிப்பருவ காதலி, கல்லூரித் தோழி, பின் வேலை பார்க்கும் இடத்தில் சந்திக்கும் பெண் என தன் நினைவுகளை அசைபோடுவார். அது ஒரு டைரிக்குறிப்பைப் போல நேர்த்தியாகவும், மென்மையாகவும் நகர்ந்தது.

ஆனால், ‘பிரேமம்’ முற்றிலும் வேறொரு தளம். அது யதார்த்தத்தை எடுத்துக்கொண்டு, அதைத் தன் மாயாஜாலத்தால் ஒரு

கவிதையாக மாற்றியது. ஆட்டோகிராஃப் ஒரு மெல்லிய நீரோடை என்றால், பிரேமம் மூன்று வெவ்வேறு காலநிலைகளில் ஆர்ப்பரிக்கும் ஓர் ஆறு. சேரனின் கதை சொல்லல் ஒருவித முதிர்ச்சியுடனும், கடந்த காலத்தை அசைபோடும் ஏக்கத்துடனும் இருந்தது. அல்போன்ஸ் புத்திரனின் கதை சொல்லல், நிகழ்காலத்தின் துள்ளலுடனும், இளமையின் அத்தனை அடாவடித்தனங்களுடனும், கொண்டாட்டத்துடனும் இருந்தது. இரு படங்களுமே சிறந்தவை என்றாலும், ‘பிரேமம்’ தொழில்நுட்பத்திலும், காட்சிமொழியிலும், இசையிலும் ஒரு புதிய அலையை உருவாக்கியது. அதுவே அதன் நீடித்த வெற்றிக்குக் காரணம்.

‘பிரேமம்’ படைப்பாளிகள்: 10 ஆண்டுப் பயணமும் இன்றைய நிலையும்

இப்படத்தின் மிகப்பெரிய சாதனை, அதன் வசூல் கணக்குகளைத் தாண்டி, தென்னிந்திய சினிமாவிற்கு ஒரு புதிய தலைமுறை நட்சத்திரங்களை பரிசாக அளித்ததில் உள்ளது. ஜார்ஜ், மலர், மேரி, செலின் என நம் மனதில் பதிந்த முகங்களும் அந்த மாயத்தை நிகழ்த்திய படைப்பாளிகளும் இந்த பத்தாண்டு பயணத்தில் அடைந்திருக்கும் உயரங்கள் ஒரு சிறு பார்வை.

அ. அல்போன்ஸ் புத்திரன் (இயக்குநர், எழுத்தாளர், படத்தொகுப்பாளர்)

‘பிரேமம்’ படத்தின் பிரம்மாண்ட வெற்றிக்குப் பிறகு, அல்போன்ஸ் புத்திரன் அடுத்த படத்திற்கு சுமார் 7 ஆண்டுகள் இடைவெளி எடுத்துக்கொண்டது, அவர் மீதான எதிர்பார்ப்பை எகிற வைத்தது. 2022ல் பிருத்விராஜ் மற்றும் நயன்தாராவை வைத்து அவர் இயக்கிய ‘கோல்ட்’ திரைப்படம், கலவையான விமர்சனங்களைப் பெற்றது. அதோடு மருத்துவ ரீதியாக மிகமோசமான நிலையில் இருப்பதாகவும், இனி சினிமாவில் இருந்து விலக முடிவு செய்திருப்பதாகவும் அறிவித்தார். ஆனால், யாரும் எதிர்பாராத விதமாக, இளையராஜாவின் இசையில் ‘கிஃப்ட்’ எனும் திரைப்படத்தின் அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இத்திரைப்படத்தின் புதிய அனுபவத்திற்காக ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

ஆ. நிவின் பாலி (ஜார்ஜ்)

’பிரேமம்’, நிவின் பாலியை ஒரு மலையாள நடிகர் என்பதிலிருந்து, முன்னணி தென்னிந்திய நடிகர்களில் ஒருவராக உயர்த்தியது. அந்த

வெற்றிக்குப் பிறகு, அவர் ஒரே மாதிரியான காதல் கதைகளில் சிக்கிக்கொள்ளாமல், 'ஆக்ஷன் ஹீரோ பிஜு' படத்தில் யதார்த்தமான போலீஸ் அதிகாரியாகவும், 'மூத்தோன்' படத்தில் மிகச் சிக்கலான கதாபாத்திரத்திலும் நடித்துத் தனது நடிப்புத் திறமையை நிரூபித்தார். 'ஜேக்கபிண்டே ஸ்வர்க்கராஜ்யம்' போன்ற குடும்பப் படங்களிலும் வெற்றி கண்டார். இடையில் சில படங்கள் சறுக்கினாலும், ராம் இயக்கிய 'ஏழு கடல் ஏழு மலை', ராகவா லாரன்ஸுடன் நடிக்கும் 'பென்ஸ்' உட்பட அவர் கைவசம் இப்பொழுது ஐந்தாறு படங்கள் உள்ளன.

இ. சாய் பல்லவி (மலர்)

இப்படத்தின் மூலம் 'மலர்' டீச்சராக அறிமுகமான சாய் பல்லவியின் பயணம், ஓர் அசாத்தியமான வெற்றிப் பயணம். தெலுங்கில் 'ஃபிடா', 'ஷ்யாம் சிங்கா ராய்', தமிழில் 'கார்கி', 'அமரன்' என அவர் தேர்ந்தெடுத்த ஒவ்வொரு படமும், அவரது நடிப்புத் திறனுக்குத் தீனி போடுவதாகவே அமைந்தது. இன்று சாய் பல்லவி, தென்னிந்தியாவின் மிக நம்பகமான மற்றும் மரியாதைக்குரிய நடிகைகளில் ஒருவர். அதன் விளைவாக பாலிவுட்டிலும் கால் பதித்திருக்கிறார். அமீர் கான் மகனுடன் இந்திப் படத்திலும், 'ராமாயணா' என்ற பிரம்மாண்டப் படத்தில் சீதையாகவும் நடித்துக்கொண்டிருக்கிறார்.

ஈ. அனுபமா பரமேஸ்வரன் (மேரி)

இப்படத்தின் துவக்கத்தில் சிறிது நேரமே வந்தாலும் எல்லோருக்கும் அவரது அடந்த கூந்தலை நினைவிருக்கும் அளவுக்கு அழகான 'மேரி' கதாபாத்திரத்தில் அறிமுகமான அனுபமா, மிகக் குறுகிய காலத்தில் தெலுங்கு சினிமாவின் முன்னணி கதாநாயகியாக உயர்ந்தார். 'அ ஆ', 'கார்த்திகேயா 2', 'டில்லு ஸ்கொயர்' என அவரது வெற்றிப் படங்களின் பட்டியல் நீளமானது. 'கார்த்திகேயா 2'வின் வெற்றி, அவரை ஒரு பான்-இந்திய நடிகையாகவும் அடையாளம் காட்டியது. தனுஷின் 'கொடி', பிரதீப் ரங்கநாதனின் 'டிராகன்' உட்பட தமிழில் மொத்தமே 4 படங்களில் நடித்திருக்கிறார். இதற்கடுத்து அவர் நடிப்பில் 'பைசன்' திரைப்படம் (இயக்கம்: மாரி செல்வராஜ்) வெளியாகவுள்ளது.



உ. மடோனா செபாஸ்டியன் (செலின்)

இப்படத்தில் யாரும் நினைத்தே பார்க்க முடியாத 'செலின்' கதாபாத்திரத்தில் அறிமுகமான மடோனா செபாஸ்டியன், தமிழில் விஜய் சேதுபதியுடன் 'காதலும் கடந்து போகும்', தனுஷுடன் 'ப.பாண்டி', கே.வி.ஆனந்த் இயக்கத்தில் 'கவண்' என முக்கியமான படங்களில் நடித்தார். விஜய் நடித்த 'லியோ' திரைப்படத்தில், யாரும் எதிர்பார்க்காத ஒரு கௌரவ நடிப்பினை வெளிப்படுத்தியிருந்தார். அதே சமயம், பல படங்களில் பாடகியாகவும் தனது திறமையை வெளிப்படுத்தி வருகிறார்.

ஊ. ஜார்ஜின் நண்பர்கள்:

ஜார்ஜின் மூன்று பருவ காலங்களிலும் அவனது காதல் கதைகளுக்குச் சாட்சியாகவும், அவனது சுக துக்கங்களில் தோள்கொடுத்தும் பயணித்த நண்பர்கள் இல்லையென்றால், 'பிரேமம்' முழுமையடைந்திருக்காது.

- கிருஷ்ணா சங்கர் (கோயா): ஜார்ஜின் மூன்று பருவங்களிலும் அவனுடனே இருக்கும் இரண்டு நண்பர்களில் ஒருவர் கோயா. ஜார்ஜின் திட்டங்களுக்குத் துணை நின்றாலும், சமயங்களில் பேசி யதார்த்தத்தைப் அவனை நல்வழிப்படுத்த முயற்சிக்கும் ஒரு யதார்த்தமான நண்பன் கதாபாத்திரம். 'பிரேமம்' படத்திற்குப் பிறகு, கிருஷ்ணா சங்கர் மலையாள சினிமாவில் ஒரு தவிர்க்க முடியாத குணச்சித்திர நடிகராக வளர்ந்துள்ளார். 'ஞண்டுகளுடெ நாட்டில் ஒரிடவேள', 'கூடாஷா', 'கோச்சாள்' போன்ற படங்களில் இவரது நடிப்பு கவனம் பெற்றது. நகைச்சுவை, சீரியஸ் என எந்தக் கதாபாத்திரத்தைக் கொடுத்தாலும், அதைத் தனது இயல்பான நடிப்பால் மெருகேற்றும் ஒரு நம்பகமான நடிகராக இன்று வலம் வருகிறார்.

- ஷபரீஷ் வர்மா (சம்பு): ஜார்ஜின் குறும்புகளுக்குத் துணைபோகும் மற்றொரு ஜாலியான நெருங்கிய நண்பன். நிவின் பாலி மற்றும் கிருஷ்ணா சங்கருடன் இவரது கெமிஸ்ட்ரி அற்புதமாகப் பொருந்தியிருந்தது சம்பு கதாபாத்திரத்தில் நடித்ததோடு, படத்தின் ஆன்மாவாகத் திகழ்ந்த பல பாடல்களுக்கு உயிர் கொடுத்தவர் இவரே.

'நேரம்' படத்தின் மிகப்பிரபலமான 'பிஸ்தா' பாடல் உட்பட பிரேமம் படத்தின் அனைத்து பாடல்களின் ('ராக்கான் குத்து' தவிர்த்து) வரிகளை எழுதியதும் இவர்தான். 'பிரேமம்' படத்திற்குப் பிறகு, ஷபரீஷ் வர்மா ஒரு பன்முகக் கலைஞராக மலையாள சினிமாவில் வலம் வருகிறார். தொடர்ந்து சில படங்களில் குணச்சித்திர வேடங்களில் நடித்தாலும், ஒரு பாடலாசிரியராகவும், பாடகராகவும் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கிறார்.

எ. சகநட்சத்திரங்கள்:

- சௌபின் ஷாஹிர் (பி.டி. மாஸ்டர் சிவன்)

ஜார்ஜின் கல்லூரிப் பருவத்தில் பி.டி மாஸ்டர் சிவன் கதாபாத்திரத்தில் தோன்றி, திரையரங்கையே அதிர வைத்தவர் சௌபின் ஷாஹிர். இவரது வெகுளித்தனமான உடல்மொழியும், வசனங்களும், நடனம் கற்றுக்கொள்ள இவர் படும் பாடும், படத்தின் மிகப் பெரிய நகைச்சுவை அத்தியாயங்கள்.

'பிரேமம்' படத்திற்குப் பிறகு, சௌபின் ஷாஹிரின் திரைப்பயணம் விண்ணை முட்டும் ராக்கெட் வேகத்தில் உயர்ந்தது. ஒரு நகைச்சுவை நடிகராக அறியப்பட்ட அவர், 'சூடானி பிரம் நைஜீரியா' படத்திற்காக சிறந்த நடிகருக்கான கேரள மாநில விருதை வென்று அனைவரையும் ஆச்சரியப்படுத்தினார்.

'பறவ' என்ற வெற்றிப் படத்தை இயக்கி, ஒரு சிறந்த இயக்குநராகவும் தன்னை நிரூபித்தார். 'கும்பளங்கி நைட்ஸ்', 'மஞ்சுமெல் பாய்ஸ்' போன்ற படங்களில் இவரது நடிப்பு தேசிய அளவில் பாராட்டப்பட்டது. இன்று மலையாள சினிமாவின் மிக

முக்கியமான நடிகர் இயக்குநர்களில் ஒருவராக, ஒரு நட்சத்திரமாகவே உயர்ந்து நிற்கிறார். ரஜினிகாந்த் நடிப்பில் வெளிவரவிருக்கும் 'கூலி' படத்தின் 'மோனிகா' பாடலில் இவரது நடனம் இந்திய அளவில் வைரலானது.

• வினய் ஃபோர்ட் (விமல் சார் - ஜாவா சார்)

சௌபின் ஷாஹிரின் 'சிவன்' கதாபாத்திரத்தின் உதவியுடன், மலர் டீச்சரைக் காதலிக்கும் மற்றொரு விரிவுரையாளர் விமல் சார். “ஜாவா இஸ் சிம்பிள்” என்று இவர் பாடம் நடத்தும் அந்தக் காட்சியும், சாய் பல்லவி கடந்து செல்வதை பார்த்ததும் “ஜாவா”வுக்கு பதில் “மாவா” என்று சொல்லும் காட்சியும், மீம்களாக இன்றும் வலம் வருகிறது. சௌபினுடன் இவர் இணைந்து வரும் ஒவ்வொரு காட்சியும், சிரிப்புக்கு நூறு சதவிகித உத்திரவாதம். இன்று, மலையாள சினிமாவின் மிகத் திறமையான மற்றும் மதிப்புமிக்க குணச்சித்திர நடிகர்களில் ஒருவர். நகைச்சுவை, வில்லத்தனம், அப்பாவித்தனம் என எந்தக் கதாபாத்திரத்தைக் கொடுத்தாலும், அதில் தனது தனித்துவ முத்திரையைப் பதிக்கும் ஒரு தேர்ந்த கலைஞராகத் தனது இடத்தைத் தக்கவைத்துள்ளார்.

• ரெஞ்சி பணிக்கர் (நிவின் பாலியின் தந்தை - டேவிட்):

ரெஞ்சி பணிக்கர்

கல்லூரியில் ஜார்ஜின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரிப்பதை புகார் தெரிவிக்க, அவனது தந்தை டேவிட்டை கல்லூரி முதல்வர் தன் அறைக்கு அழைக்கிறார். அவரிடம் ஜார்ஜ் வகுப்பில் குடிப்பது, பேராசிரியர்களை கிண்டலடிப்பது, கெட்ட வார்த்தையில் குறுஞ்செய்தி அனுப்புவது, மாணவர்களுடன் சண்டை என புகார் மூட்டைகளை கொட்டிக்கொண்டே இருப்பார். வழக்கமாக, மகனைத் தந்தை கண்டிப்பார் என்று எதிர்பார்க்கும் நேரத்தில், டேவிட் முற்றிலும் எதிர்பாராத ஒரு காரியத்தைச் செய்வார்.

“இப்போ என்ன சார்! இவன் வகுப்புல குடிக்கிறான். அதானே! இது எனக்கும் பிடிக்கல. டேய் ஜார்ஜ்! இனிமேல் வகுப்புல குடிக்காத. குடிக்கனும்னா வெளிய போய் குடி.” என்று சுற்றியிருக்கும் அனைவருக்கும் (திரையரங்கில் அமர்ந்திருந்தவர்கள் உட்பட) ஷாக் கொடுப்பார். நூற்றாண்டு கண்ட இந்திய சினிமா இப்படி ஒரு தந்தையைக் கண்டதில்லை. இந்த ஒரு காட்சியிலேயே ஜார்ஜின் முரட்டுத்தனமும், அடங்காத குணமும் எங்கிருந்து வந்தது என்பதும் நமக்கு புரிந்திருக்கும்.

பிரபல மலையாள இயக்குநரும், நடிகருமான ரெஞ்சி பணிக்கர், ஜார்ஜின் தந்தை டேவிட் ஆக இந்த ஒரு காட்சியில் மட்டுமே நடித்திருந்தாலும், அந்த மொத்தக் காட்சியையும் அவர் பக்கம் திருப்பியிருப்பார். மனுஷன் திரையிலிருந்து அகலும் வரையில் முற்றிலும் அவர் ஆதிக்கம்.

இந்தப் பட்டியல், அல்தாஃப் சலீம், ஷராஃப் உதீன் என நீண்டுகொண்டே போகக்கூடியது. ஒவ்வொரு சொட்டாக சேரும் மழை ஒரு கடலை உருவாக்குவது போல், இப்படி ஒவ்வொரு கதாப்பாத்திரங்களும் இணைந்து 'பிரேமம்' என்ற வெற்றிப்படத்தை உருவாக்கியிருந்தன. அது ஒரு தரமான படைப்பு, திறமையான கலைஞர்களுக்கு எவ்வளவு பெரிய வாசலைத் திறந்துவிடும் என்பதற்கு இது ஒரு உதாரணம். அந்தப் படத்தில் பணியாற்றிய ஒவ்வொருவரும் இன்று தென்னிந்திய சினிமாவின் தவிர்க்க முடியாத சக்திகளாக வளர்ந்திருப்பது, 'பிரேமம்' நிகழ்த்திய மிகப்பெரிய மாயம்.

என்றும் ஓயாத பெருமழை

'பிரேமம்' ஏன் ஒரு தலைமுறையின் திரைப்படமாக மாறியது? ஏனென்றால், அது காதலின் வெற்றியை மட்டுமின்றி, அது தோல்விகளையும் கொண்டாடியது. அது காயங்களை ஏற்றுக்கொண்டது. அது பக்குவப்படுதலின் அவசியத்தைப் பேசியது. ஜார்ஜின் மூன்று பருவங்களும், நம் வாழ்வில் நாம் கடந்து வந்த, கடந்துகொண்டிருக்கிற, அல்லது கடக்கப் போகிற பருவங்களின் பிரதிபலிப்பு.

முதல் காதல் முட்டாள்தனமாக இருக்கலாம், ஆனால் அது தூய்மையானது. இரண்டாம் காதல் தீவிரமாக இருக்கலாம், ஆனால் அது நம்மைச் செதுக்கும். மூன்றாம் காதல் அமைதியாக இருக்கலாம், ஆனால் அதுதான் நம்மை முழுமையாக்கும். வாழ்க்கையின் இந்த மூன்று நிலைகளையும் இவ்வளவு அழகாக, இவ்வளவு உயிர்ப்புடன், இவ்வளவு நேர்மையுடன் திரையில் காட்டியதால்தான், 'பிரேமம்' நம் நினைவுகளின் ஒரு பகுதியாக இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கிறது. அந்தப் பெருமழையின் சாரல், நம் ஆன்மாவை நனைத்துக்கொண்டே இருக்கும், என்றும், எப்போதும்.

Aavanalzhi - An Offline Tamil Bi-monthly, August - September 2025 Issue. For private circulation only. Complimentary copy

WITH BEST COMPLIMENTS FROM

A CENTRE DEDICATED TO PREVENTION & REVERSING HEART DISEASE





Dr. J.K.P. MEDICAL CENTER

1/1992, Krishna Colony, Trichy Road, Coimbatore 641 005
Phone: 0422 - 231 72 72, 231 78 78
Mobile: 98422 04195, 89038 87276
Email: drjkpkovai@yahoo.co.in
Website: www.jkpmedicalcenter.com

CENTRE TIMINGS: 8.00 AM TO 5.00 PM

ஆசிரியர்: சுதேசமித்திரன்

aavanalzhi

இதழ் 31 | நாழி 5 ஆவம் 1 | ஆகஸ்ட் – செப்டம்பர் 2025

ஆவநாழி

கலை சினிமா இலக்கிய மென்னிதழ்

₹100

தரு வெளியீடு

5ஆம் ஆண்டு சிறப்பிதழ்

280 பக்கங்கள்

- நாஞ்சில் நாடன்
- ரவி சுப்பிரமணியன்
- எம்.கோபாலகிருஷ்ணன்
- இளம்பிறை
- கமலதேவி
- நா.விச்வநாதன்
- யதிராஜ ஜீவா
- பூங்கோதை
- சிவபஞ்சவன்
- முத்துச் செல்வன்
- ஜி.ஏ.கௌதம்
- ரகுராமன்
- ராதிகா வெங்கட்ராமன்
- வெற்றிச் செல்வன்
- ஓவியர் சிவபாலன்
- சக்திவேல் கோபிசெட்டிபாளையம்
- கோவிந்தராஜ் சுப்பிரமணியன்
- கௌஷிக் ராஜன்
- ஆடா லிமோன்
- எஸ்தர் ஃபிலிப்ஸ்
- இல்யா கமின்ஸ்கி
- அலெக்ஸ் எப்ஸ்டைன்
- ஏ.எம்.ஹோம்ஸ்
- ஃபங்கி ரோனின்
- அனுராதா க்ருஷ்ணஸ்வாமி
- ஓவியர் ஜீவா
- அரவிந்த் வடசேரி
- சுதேசமித்திரன்

இளையராஜா

வரம் என்பதா பொக்கிஷம் என்பதா?

புதுவை இளவேனில்

தரு
வெளியீடு

ஆவநாழி

கலை சினிமா இலக்கிய மென்னிதழ்

இதழ் 31
நாழி 5 ஆவம் I

ஆகஸ்ட் – செப்டம்பர் 2025

ஆசிரியர், வெளியிடுபவர், வடிவமைப்பாளர்
சுதேசமித்திரன்

இணை ஆசிரியர்
ஓவியர் ஜீவா

உதவி ஆசிரியர்
அரவிந்த் வடசேரி

முன்னட்டை AI ஓவியம் : ஆனந்த் ஜீவா

சந்தா விவரம்

ஆண்டு சந்தா	ஆயுள் சந்தா	தனி இதழ்
ரூ.500	ரூ.5000	ரூ.100

சந்தா மற்றும் நன்கொடைகளுக்கு:

G Pay
QR Code

Bank details:
THARU PUBLICATION
Canara bank (Kovaipudur Branch)
Current A/c No.: 5480201000185
IFSC code: CNRB0005480

ஆவநாழி
தரு வெளியீடு
ப்ளாட் எண் 105, முதல் தளம்,
ஆர் பிளாக், கோவைப்புதூர், கோயமுத்தூர் 641 042
G Pay : **(+91) 99409 37599**
படைப்புகள் அனுப்ப email: aavanalzhi@gmail.com

aavanalzhi

பக்க பலன்

08 இளம்பிறை
20 ரவி சுப்பிரமணியன்
22 பூங்கோதை
36 சிவபஞ்சவன்
38 கமலதேவி
48 ஃபங்கி ரோனின்
58 முத்துச் செல்வன்
86 எம்.கோபாலகிருஷ்ணன்
96 ரகுராமன்
110 அரவிந்த் வடசேரி
116 யதிராஜ ஜீவா
122 கோவிந்தராஜ் சுப்பிரமணியன்
132 சக்திவேல் கோபிசெட்டிபாளையம்
146 ஓவியர் ஜீவா
154 கௌஷிக் ராஜன்
182 ஓவியர் சிவபாலன்
196 நா.விச்வநாதன்
200 ராதிகா வெங்கட்ராமன் / அனுராதா க்ருஷ்ணஸ்வாமி
210 ஆடா லிமோன்
212 எஸ்தர் ஃபிலிப்ஸ்
214 இல்யா கமின்ஸ்கி
216 ஜி.ஏ.கௌதம்
232 வெற்றிச் செல்வன்
240 புதுவை இளவேனில்
250 நாஞ்சில் நாடன்
262 சுதேசமித்திரன்

47 / 95 / 114 / 130 குறுங்கதைகள்

புகைப்படம் : ஆனந்த் ஜீவா / Liquid Twin